ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இல்லத்தில் ஆத்தூர் தொகுதி பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்து தீர்வு பெற்றனர். ஆத்தூர் தொகுதியில் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகளை பெற்ற பயனாளிகள் விரைவில் பணிகளை முடிக்க உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சிநிர்வாகிகள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்தார். அருகில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

பாராலிம்பிக்ஸ் பேட்மிண்டன் போட்டியில்

வெண்கலப் பதக்கம் வென்ற நித்ய ஸ்ரீ சிவனுக்கு வாழ்த்து!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, செப். 4 - பாராலிம்பிக்ஸ்2024 பெண்கள் ஒற்றையர் பேட்மிண்டன் SH6 போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற நித்ய ஸ்ரீ சிவன் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

பாராலிம்பிக்ஸ் 2024ல் பெண்கள் ஒற்றையர் பேட்மிண்டன் SH6 போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற நித்ய ஸ்ரீ சிவன் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்! உங்களது இந்தச் சிறந்த சாதனை; மகத்தான திறமை, ஆர்வம் மற்றும் கடின உழைப்பை வெளிப்படுத்துகிறது.

எங்கள் அனைவருக்கும் நீங்கள் பெருமை தேடித் தந்துள்ளீர்கள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில்

நெல்லை மாநகரத்தில் முப்பெரும் விழா: ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

டி.பி.எம்.மைதீன்கான் தலைமை: இரா.ஆவுடையப்பன் – கழகத்தினர் பங்கேற்பு!

நெல்லை, செப். 4 - முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பிறந்த நாள் விழா,தொடர் 100 நிகழ்ச்சிகள் நடத்திய நெல்லை மாநகர கழக நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா, 2024 நெல்லை நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகள் பெற உழைத்த நிர்வாகிகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தல் ஆகிய முப்பெரும் விழா நிகழ்வு வருகிற (07.09.2024 - சனிக்கிழமை) அன்று காலை 9 மணி அளவில் வண்ணார்பேட்டை ஹோட்டல் அப்ஃனா பார்க்கில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை,மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல்,மாநகர துணைச் செயலாளர்கள் பாலமுருகன் என்ற பிரபு,சுதாமூர்த்தி,மாநகர பொருளாளர் அண்ணாதுரை, தலைமை தீர்மானகுழு உறுப்பினர் சுப.சீதாராமன் மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலாசத்யானந்த், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, நெல்லை மத்திய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் ஆகியோர் முன்னிலை யில் நடைபெறுகிறது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றுகிறார் நிகழ்ச்சியை தலைமைக் கழக பேச்சாளர் மைக் மணி தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் உரையாற்றுகின்றனர். மாநில மகளிர் அணி செயலாளர்,பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர், நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சி பாண்டியன்,ஏ. எல்.எஸ். லெட்சுமணன், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் ஒன்றியச் செயலாளர்கள் மாரியப்பன், அருள்மணி, அன்பழகன், வேலங்குளம் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன், நடராஜன், ராஜேஸ்வரி உள்பட மாவட்ட பிரதிநிதிகள் மேலப்பாளையம், பாளை பகுதி கழக நிர்வாகிகள்,மண்டல தலைவர்கள்,கழகப் பேச்சாளர்கள், மாநகரப் பிரதிநிதிகள், மாவட்ட,மாநகர சார்பு அணி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட மூத்த முன்னோடிகள் கழகத்தினர் திரளாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வில் 100 நபர்களுக்கு கேடயம், வட்ட செயலாளர்கள் 5 நபர்களுக்கு பரிசுத் தொகை,5 நபர்களுக்கு கைப்பேசி,12 நபர்களுக்கு தங்க நாணயம், 14 நபர்களுக்கு ஸ்மார்ட் வாட்ச் மறைந்த 3 கழக குடும்பத்திற்கு நிதி வழங்குதல் போன்றவை நடைபெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் செய்துள்ளார்.

புதுக்கோட்டை – மாவட்ட மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் ஆர்.கண்ணதாசன் சிறிய தகப்பனார், ஆலங்குடிஎம்.ராசியமங்கலம் ஆர்.குழந்தை தாஸ் (பிளாசம் சிறப்பு பள்ளி தாளாளர்) இல்ல விழாவை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தலைமை ஏற்று நடத்திவைத்தார். உடன் மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில மருத்துவரணி துணை செயலாளர் டாக்டர் ஆர். அண்ணாமலை, அரசு பொது வழக்கறிஞர் அறந்தாங்கி பா.வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர் கே.பி.கே.டி.தங்கமணி, ஒன்றிய செயலாளர்கள் அரு.வடிவேலு, கேஎஸ்.ரவி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம், தெற்கு வர்த்தக அணி அமைப்பாளர் தலைவர் ஆர்.ரெத்தினவேல், கழக மூத்த நிர்வாகி ஆர்.நாராயணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், கே.வி.எஸ்.ஏ.மோகன், கீரமங்கலம் நகர செயலாளர், சேர்மன் கே.சி. சிவக்குமார், ஏ.கே.செல்வம், எம்.கருணாகரன், மாமன்ற உறுப்பினர் கவிவேந்தன், பழனிகுமார், ஏ.முகமது, ரபீக், வீரை.ஆசைதம்பி, பாலமுருகன், வே.ராஜ் ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூரில் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல்!

திருவள்ளூர், செப்.4- திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி தி.மு.க. சார்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் ஆவடி அடுத்த பட்டாபிராம் நெமிலிச்சேரி ஒன்றிய பகுதி செயலாளர்கள் பொன். விஜயன், டி.தேசிங்கு ஆகியோர் வரவேற்பில் மாவட்ட அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி புதிய உறுப்பினர்களை இணைத்தார்.

அருகில் மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ம.ராஜ், மேயர் உதயகுமார், சன்.பிரகாஷ், பரமேஸ்வரி கந்தன், நெமிலி கே.சுரேஷ்குமார், கு.தமிழ்ச்செல்வி, ஜி.துர்கா பிரசாத், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, விஜெ. உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், பொறியாளர் எம்.மோகன், வி.தியாகராஜன், கலை மா.சேகர், து.சௌந்தர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

மதுரை வடக்கு மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் மற்றும் வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கியும், வருகிற ஒன்பதாம் தேதி மதுரை வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்து விழாவில் பங்கேற்பது மற்றும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்பது குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமையில் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட பொருளாளர் எம்.சோமசுந்தர பாண்டியன், பேரூர் செயலாளர் மு. பால்பாண்டியன், ஒன்றிய செயலாளர் பால ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், திரளான கழகத்தினர் பங்கேற்றனர்.

தேசிய கல்விக் கொள்கைக்கு அழுத்தம் கொடுக்காமல் – ஒன்றிய அரசு

சமூக அக்கறையோடு நிதியை ஒதுக்க வேண்டுமென்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப். 4 - தேசிய கல்விக் கொள்கைக்கு அழுத்தம் கொடுக்காமல் ஒன்றிய அரசு சமூக அக்கறையோடு நிதியை ஒதுக்க வேண்டுமென்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து 3.9.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

தேசிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசு வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்தி திணிப்புக்கான அம்சம் இருப்பதால் தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு நிராகரித்து வருகிறது. மேலும், மாநில கல்விக் கொள்கையை தமிழக அரசு வடிவமைத்து வருகிறது. அதேநேரம் பிஎம் ஸ்ரீ(பிரதமரின் பள்ளிகள்) பள்ளிகளை அமைப்பது தொடர்பாக ஆராயவும் தமிழக அரசு குழுவை நியமித்துள்ளது. எனினும், தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாததால் தமிழக கல்வி திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு தரவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

தினகரன்

செப்டம்பர் 3, 2024 செவ்வாய்க்கிழமை

கல்வியில் அழுத்தம்

தேசிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசு வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்தி திணிப்புக்கான அம்சம் இருப்பதால் தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு நிராகரித்து வருகிறது. மேலும், மாநில கல்விக் கொள்கையை தமிழக அரசு வடிவமைத்து வருகிறது. அதேநேரம் பிஎம் ஸ்ரீ(பிரதமரின் பள்ளிகள்) பள்ளிகளை அமைப்பது தொடர்பாக ஆராயவும் தமிழக அரசு குழுவை நியமித்துள்ளது. எனினும், தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாததால் தமிழக கல்வி திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு தரவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

இந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பேசியுள்ள தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அனைவருக்கும் கல்வி திட்டத்தில், ஒன்றிய அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய பங்கீட்டு தொகை ரூ.7573 கோடி இதுவரை விடுவிக்கப்படவில்லை. இதுகுறித்து, முதல் வரும் அமெரிக்கா செல்வதற்கு முன்பு ஒன்றிய அரசை வலியுறுத்தி விட்டு சென்றார். மேலும் தமிழக எம்.பிக்கள் அனைவரும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை நேரில் சந்தித்தனர். மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு இதில் அரசியல் செய்ய வேண்டாம் என்று நேரடியாக வலியுறுத்தினர். தேசிய கல்விக் கொள்கை 2020ம் ஆண்டு தான் அமல்படுத்தப்பட்டது. ஆனால் அதற்கு முன்பே அனைவருக்கும் கல்வி திட்டம் 2018ம் ஆண்டில் அமல்படுத்தப்பட்டுவிட்டது.

எனவே இந்த விஷயத்தில் அரசியல் செய்யாமல் உடனடியாக நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். தேசிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து ஒன்றிய அரசு அழுத்தம் கொடுக்கிறது. ஒன்றிய அரசு நிதி வழங்காதால் ஏற்பட்டுள்ள நிதிச் சுமையை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளை தமிழக முதல்வர் மேற்கொண்டு வருகிறார். தமிழகத்தில் உள்ள ஆசிரியர்கள் சம்பளம் உள்ளிட்ட செலவினங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் தொடர்ந்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என கூறினார்.

பிரதமரின் ஸ்ரீ பள்ளிகள் திட்டத்துக்கான புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட தமிழக அரசு தொடக்கத்தில் ஒப்புக்கொண்டது. ஆனால், இது வரை அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. கல்வியின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கும், அரசு பள்ளிகளை மேம்படுத்தவும் பிஎம் ஸ்ரீ பள்ளி கள் திட்டத்தை தமிழகம் ஏற்றுக்கொள்வது முக்கியம் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

இத்திட்டத்தில் டெல்லி, பஞ்சாப், மேற்கு வங்கம், தமிழகம், கேரளா ஆகிய மாநிலங்கள் இதுவரை இணையவில்லை. மும்மொழி கொள்கையில் இருந்து விலக்கு உள்பட சில கோரிக்கை களை தமிழகம் முன்வைத்தது. ஆனால், அதை ஏற்க ஒன்றிய அரசு மறுத்துவிட்டதால் தமிழகம் சேரவில்லை. இதனால் கடந்த கல்வியாண்டில் (2023-24) 4வது தவணை நிதியுதவியும், நடப்பு கல் வியாண்டில் (2024-25) முதல் தவணை நிதியையும் ஒன்றிய அரசு நிறுத்தியுள்ளது. அதிமுக, பாமக, காங்கிரஸ் மற்றும் கல்வியாளர்கள், ஆசிரியர் சங்கங்கள் உள்பட பல்வேறு தரப்பிலும் நிதியை விடுவிக்க வலியுறுத்தப்பட்டு வருகிறது.

15,000 ஆசிரியர்களின் ஊதியம் மற்றும் மாணவர்களின் கல்வி நிலையை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு தேசிய கல்வி கொள்கைக்கு அழுத்தம் கொடுக்காமல், சமூக அக்கறையோடு இரண்டு தவணை நிதியை ஒதுக்க வேண்டும் என்பதே அனைத்து தரப்பு மக்களின் மிகுந்த எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவகங்கை, காளையார் கோவில்

ஒன்றியங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் சிறப்புரை!

சிவகங்கை. செப். 4. கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் ,கழகங்களின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் மூன்றாம் கட்டமாக நேற்று முன்தினம் சிவகங்கையில் ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், சிவகங்கை நகரம், காளையார் கோவில், கல்லல், ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், நாட்டரசன் கோட்டை பேரூர் ஆகியவற்றிற்கான பொது உறுப்பினர்கள் கூட்டம் சிவகங்கை , காளையார் கோவிலில் மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம். ஜெயராமன், நா. நெடுஞ்செழியன், யோக. கிருஷ்ணகுமார், வே. ஆரோக்கியசாமி ஆர்.எம். கென்னடி ,நாட்டரசன்கோட்டை பேரூர் கழகச் செயலாளர் ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டங்களில் அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் சிறப்புரையாற் றினார் .மாவட்ட கழக துணை செயலாளர் த. சேஞ்சைமாறன் கழக பணிகள் குறித்து விளக்கி பேசினார். சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், கல்லல்ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள். இந்த கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மகார் ,வீனஸ் ராமநாதன், ஜெய காந்தன், ராம்தாஸ், மகளிர் அணி மார்க்ரெட் கமலா ,திலகவதி கண்ணன், மஞ்சுளா ,தமிழ் பிரியா, பாக்யலட்சுமி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராஜாஅமுதன், முதல் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, நகர மன்ற துணைத் தலைவர்எம். கார்கண்ணன், தொழிலாளரணி தனசேகரன், தொ.மு.ச. முருகேசன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மு.குமணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிக்கிட்டு. சதீஸ், அரிகரன், பஞ்ச வர்ணம், மனோகரன், பிரவீன், பாண்டிய ராஜன், ராஜாங்கம், ஆனந்தராஜ், தங்கச்சாமி, ஐயப் பன், முனியாண்டி., ஆறுமுகம், சம்பத் கணேசன், மருதுபாண்டி., அழகர் ,அழகு சுந்தரம், முத்துகிருஷ் ணன், கருப்பையா, முத்துசாமி, செந்தில்குமார், ஒன்றிய கவுன்சிலர்கள் ரமேஷ், வேல்முருகன், பொன்னுச்சாமி, ராமமூர்த்தி, மாரி சோமசுந்தரம் முன்னாள் துணைபெரும் தலைவர் முத்துராமலிங் கம் ,எஸ். தமிழரசன் ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், இளைஞரணி மோகன்ராஜ் நவீன், ரவிச்சந்திரன், அசோக், சுசி, வரதராஜன், தோக்கப்பன் ரமேஷ், கண்ணன், விஜயகுமார், ஒன்றிய கவுன்சிலர்கள் செல்வி மனோகரன், கந்தசாமி, பாண்டியராசன்,ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், கண்ணதாசன், கோதண்டம், கணேசன், கண்ணப்பன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் குரு. போஸ், சார்லஸ் , தொழில் நுட்ப அணி தனபால், முகமது சக்கரியா, ஐயப்பன், ஜோதி ராமலிங்கம் ,குரு, ஒன்றிய துணைச்செயலாளர் முத்துகுமார் உட்பட ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகர தி.மு.க சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்புரை நிகழ்த்தி, புதிய உறுப்பினர்கள் அட்டை மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர், தென்திசையின் தீர்ப்பு 40/40 நூல்களை வழங்கினார். நகர செயலாளர் ம.அன்பழகன் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.சம்பத்குமார், பொதுக்குழு உறுப்பினர் சத்தியநாராயணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, ஜோலார்பேட்டை நகர மன்ற தலைவர் காவியாவிக்டர் மற்றும் நகர கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.